இணைப்புகள் I

(82 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 370-க்கான விடையைக் காண்க.)

அ.1. மாநிலங்களிடை உறவு மன்றம் (Inter-State Council) ஒன்றை நிறுவினால், மாநிலங்கள் ஒன்றோடொன்று அடிக்கடி சந்தித்துக் கொள்ளவும், தங்களுக்கிடையே எழும் பொதுவான பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளவும் ஏதுவாக அமையுமென இந்த அரசு கருதுகிறது என்று பலமுறை மைய அரசுக்குத் தெரிவித்திருந்ததோடு, அத்தகைய மன்றமொன்றை நிறுவுமாறும் மைய அரசை இந்த அரசு வற்புறுத்தி வந்துள்ளது. இதற்கிடையே, மைய அரசு, மைய-மாநில உறவுகளைப்பற்றி ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா அவர்கள் தலைமையில், ஆணையொன்றை அமைத்துள்ளது என்றும், அரசமைப்பின் 263 ஆம் உறுப்பில் குறிப்பிடப் பட்டுள்ள மாநிலங்களிடை உறவு மன்றத்தைப் பற்றியும் அந்த ஆணையம் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும் என்றும் இந்த அரசுக்குத் தெரிவித்தது. எனவே, இந்த அரசு மேற்சொன்ன ஆணையத்திடம் மைய-மாநில உறவுகள் பற்றிய இந்த அரசின் கருத்தையும் மற்றும் நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணையத்தின் வினாப்பட்டியலுக்கான பதில்கள் அடங்கிய அறிக்கையையும், 1985-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அளித்தது. அந்த அறிக்கையில், மாநிலங்களிடை உறவு மன்றம் பற்றிய பொருளையும் ஆராய்ந்து இந்த அரசு தனது கருத்தினை தெரிவித்திருக்கின்றது. அதாவது மாநில அரசுகளுக்கிடையிலான குழு ஒன்றை அமைப்பதற்கு அரசமைப்பின் 263 ஆம் உறுப்பில் தனி வகைமுறை இருந்தபோதிலும், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியதிலிருந்து நாளது தேதிவரையிலும், அத்தகைய குழு ஒன்றை ஏற்படுத்துவது பற்றி எண்ணியோ, கருதியோ பார்க்காத காரணத்தால் அத்தகைய குழு ஒன்றை அமைப்பதற்கு வகை செய்கின்ற அரசமைப்புச் சட்டத்தின் 263-ஆம் உறுப்பையே முழுமையாக நீக்கி (எடுத்து) விடலாம் என்று இந்த அரசு மேற்சொன்ன ஆணையத்திற்குப் பரிந்துரை செய்திருக்கின்றது.

1987 ஏப்ரல் 10]

2. மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளிலும், அரசமைப்பின் 263-ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாநிலங்களிடை உறவு மன்றமொன்று அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதோடு, அப்படியே அமைக்கப்பட்டாலும் மக்களின் விருப்பத்திற்கிணங்க செயல்படுத்தச் செய்வதற்கு வாய்ப்பு எதுவும் இல்லை என்பதாலும் மைய—மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் குறித்த ஆலோசனைக் குழு (Advisory Commission on Inter-State Governmental Relations) என்கின்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினால், பல்வேறு மாநில அரசுகளுக்கிடையேயும் மற்றும் மைய அரசுடனும் ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்குள்ள சிறந்த வழிவகைகளில் ஒன்றாக அது அமையும் என்பது இந்த அரசின் கருத்தாகும்.

ஆ. கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS